# தமிழ்நாட்டில் குடிநீர்த் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிதி வழங்கப்பட்டதா?

## மக்களவையில் - தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 28-

தென் சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் ஜல் சக்தி அமைச்சகத்திடம் தமிழ்நாட்டில் குடிநீர் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட மத்திய நிதி குறித்து சில கேள்விகளை முன்வைத்தார்.

அதாவது, ஹோகெனக்கல் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் - கட்டம் III பணிகள் மத்திய அரசின் பங்கான ரூ.2,283 கோடி விடுவிக்கப்படாததால் மெதுவாக நடைபெறுகிறது என்பது உண்மையா? அதன் தற்போதைய நிலை என்ன?

மேலும், அந்தத் திட்டத்திற்கான நிலுவை நிதியை விரைவாக விடுவிக்க மத்திய அரசு என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது? வேலூர் மக்களவைத் தொகுதி உட்பட தமிழ்நாட்டில் நடைபெறும் குடிநீர் திட்டங்களுக்கு மத்திய அரசு வழங்கிய நிதி விவரங்கள் என்ன? ஆகிய கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் இணை அமைச்சர் வி. சோமண்ணா எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டுள்ளதாவது:

2019 ஆகஸ்ட் மாதம் முதல் மத்திய அரசு 'ஜல் ஜீவன் மிஷன் - ஹர் கர் ஜல்' (JJM) (அனைத்து வீடு களுக்கும் நீர்) என்ற மத்திய நிதி ஆதரவு திட்டத்தை மாநிலங்களுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் நோக்கம், நாட்டின் அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் பாதுகாப்பான மற்றும் போதுமான குழாய் குடிநீர் இணைப்பை வழங்குவது ஆகும்.

இந்த திட்டம் 2019 - 20 முதல் 2023 - 24 வரை ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு செயல்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. இந்த காலக்கட்டத்திற்குள் குடிநீர் திட்டங்களுக்கான திட்டமிடல், ஒப்புதல் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றை மாநில அரசுகள் நிறைவு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாடு அரசின் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு (SLSSC) கடந்த 2023 ஜூன் மாதத்தில் ஹோகெனக்கல் குடிநீர் திட்டம் - கட்டம் IIIக்கு ஒப்புதல் வழங்கியது. ஆனால் இந்த திட்டம் மிஷன் காலக் கட்டத்திற்குள் ஒப்பந்தம் செய்யப்படாததால் நடைமுறைக்கு வரவில்லை என்று பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025-26 மத்திய பட்ஜெட்டில் ஜல் ஜீவன் திட்டத்தை 2028ஆம் ஆண்டு வரை நீட்டிப்பதாக நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

குடிநீர் என்பது மாநிலங்களின் பொறுப்பில் உள்ள துறையாகும். மாநில அரசுகள் திட்டங்களை திட்டமிட்டு, ஒப்புதல் அளித்து செயல்படுத்துகின்றன. மத்திய அரசு தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவை வழங்குகிறது.

இந்த திட்ட காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் கிராமப்புற குடிநீர் திட்டங்களை செயல்படுத்துவதற்காக மத்திய அரசு மொத்தம் ரூ.5,899.53 கோடி நிதி வழங்கியுள்ளது.

இதில் வேலூர் மக்களவைத் தொகுதி உட்பட மாநிலம் முழுவதும் கிராமப்புற குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்

### பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புற 2.0 திட்டத்தின் கீழ்

# கட்டிடம் முடிந்தும் பணம் முடக்கத்தால் பயனாளிகள் காத்திருக்கும் நிலை!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. குற்றச்சாட்டு!



நாமக்கல், மார்ச் 28-

பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புறம் (PMAYU) 2.0 திட்டத்தின் செயல்படுத்தல் நிலை மற்றும் வட்டி மானியம் வழங்கலில் ஏற்பட்டுள்ள நிலை, வீடு கட்டியவர் காத்திருப்பு வேதனை மற்றும் இறுதி தொகை தாமதம் குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் மாநிலங்களவையில் மத்திய அரசை கடுமையாக சுட்டிக்காட்டும் வகையில், கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் எழுப்பிய கேள்வியில், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனாநகர்ப்புறம் (PMAYU) 2.0 திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை அனுமதி வழங்கப்பட்ட மற்றும் கட்டுமானம் தொடங்கப்பட்ட வீடுகளின் மொத்த எண்ணிக்கை என்ன என்றும், முதல் கட்டமாக அறிவிக்கப்பட்ட 1 கோடி வீடுகள் எப்போது நிறைவு செய்யப்படும் என்பதிலும் தெளிவின்மை நீடிப்பதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், நடப்பு நிதியாண்டில் கடன் இணைந்த மானியம் திட்டம் (CLSS) கீழ் பொருளாதார ரீதியாக பலவீனமான பிரிவு (EWS) மற்றும் குறைந்த வருமானக் குழு (LIG) பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வட்டி மானியத் தொகை என்ன என்பது பற்றியும் அவர் விளக்கம் கோரியுள்ளார்.

அத்துடன், கூரை மட்டம் வரை கட்டுமானம் நிறைவு செய்த பல பயனாளிகளுக்கு மத்திய உதவியின் இறுதி தவணை வழங்கலில் நீண்டகால தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், கட்டிடம் முடிந்தும் பயனாளிகளுக்கு மானியம் விநியோகம் தடுமாற்றம்,

வீடு கட்டியவர் காத்திருப்பு வேதனை இறுதி தொகை தாமதம் என பெரும் குற்றச்சாட்டு எழுப்பி, இதுகுறித்து மத்திய அரசு உண்மையில் விழிப்புணர்வுடன் செயல்படுகிறதா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புறம் (PMAYU) 2.0 திட்டம் செயல்படுத்தல் நிலை மற்றும் வட்டி மானியம் கோரிக்கைகள் குறித்து மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சர் மனோஹர் லால், இதுகுறித்த விரிவான அறிக்கையை அவையில் வைத்துள்ளோம்.

அதில் வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் (MoHUA), 25.06.2015 முதல் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புறம் (PMAYU) திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டம் நாடு முழுவதும் தகுதியான நகர்ப்புற பயனாளிகளுக்கு அனைத்து காலநிலைக்கும் ஏற்ற நிரந்தர (பக்கா) வீடுகளை அடிப்படை வசதிகளுடன் வழங்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புறம் (PMAYU) 2.0 திட்டம் பயனாளி தலைமையிலான கட்டுமானம் (BLC), கூட்டாண்மையில் மலிவான வீடமைப்பு (AHP), இடத்திலேயே குடிசைப்பகுதி மறுவளர்ச்சி (ISSR), கடன் இணைந்த மானியம் திட்டம் (CLSS) ஆகிய நான்கு கூறுகளின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதில் CLSS கூறு மத்திய துறை திட்டமாக செயல்படுத்தப்பட்டது. MIG பிரிவிற்கான CLSS 31.03.2021 அன்று முடிவடைந்தது; EWS/LIG பிரிவிற்கான CLSS 31.03.2022 அன்று முடிவடைந்தது.

31.03.2024க்கு முன் அனுமதிக்கப்பட்டு கட்டுமானத்தில் உள்ள வீடுகளை நிறைவு செய்யவும், SNASPARSH தொகுதி மூலம் நிதி வெளியீட்டை மேற்கொள்ளவும், திட்ட காலவரையறை 30.09.2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புறம் (PMAYU) 2.0 திட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, 01.09.2024 முதல் "அனைவருக்கும் வீடு" இலக்குடன் PMAYU 2.0 திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் கூடுதலாக 1 கோடி பயனாளிகளை ஆதரிக்கும் வகையில் இது செயல்படுத்தப்படுகிறது.

பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புறம் (PMAYU) 2.0 திட்டம் BLC, AHP, மலிவான வாடகை வீடமைப்பு (ARH), வட்டி மானியம் திட்டம் (ISS) ஆகிய நான்கு கூறுகளின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதில் BLC, AHP, ARH கூறுகள் மாநிலங்கள் மற்றும் மத்தியப் பிரதேசங்களின் மூலம் மத்திய ஆதரவு திட்டமாக செயல்படுத்தப்படுகின்றன; ISS கூறு மத்திய துறை திட்டமாக மத்திய நோடல் முகாமைகளின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மாநிலங்கள் மற்றும் மத்தியப் பிரதேசங்கள் சமர்ப்பித்த திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் இதுவரை 125.15 லட்சம் வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் PMAYU 2.0 கீழ் 13.67 லட்சம் வீடுகள் அடங்கும். அனுமதிக்கப்பட்ட வீடுகளில் 116.57 லட்சம் வீடுகளில் கட்டுமானம் தொடங்கப்பட்டுள்ளது;

02.03.2026 நிலவரப்படி 97.30 லட்சம் வீடுகள் முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மொத்தம் அனுமதிக்கப்பட்ட ரூ.2.09 லட்சம் கோடி மத்திய உதவிக்கெதிராக ரூ.1.77 லட்சம் கோடி வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை PMAYU மற்றும் PMAYU 2.0 திட்டங்களின் CLSS/ISS கூறுகளின் கீழ் 25.88 லட்சம் பயனாளிகளுக்கு ரூ.59,254 கோடி வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் PMAYU 2.0 திட்டத்தின் ISS கூறின் கீழ் 84,102 பயனாளிகளுக்கு ரூ.386 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் 69,864 பயனாளிகள் EWS/LIG பிரிவைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

PMAYU மற்றும் PMAYU 2.0 திட்ட வழிகாட்டுதல்களின் படி, மத்திய உதவி 40%, 40% மற்றும் 20% என மூன்று தவணைகளில் வழங்கப்படுகிறது. இறுதி 20% உதவி, வீடுகள் முழுமையாக முடிந்த பின் மட்டுமே வழங்கப்படும்; கூரை நிலை அடைந்ததன் அடிப்படையில் அல்ல எனவும் விளக்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய உதவி வெளியீடு மாநிலங்கள் மற்றும் மத்தியப் பிரதேசங்கள் பின்பற்ற வேண்டிய கட்டாய நிபந்தனைகளுக்கு உட்பட்டது. பயன்பாட்டு சான்றிதழ்கள், ஆதார் இணைப்பு, TPQMA பரிந்துரைகளின் நடவடிக்கை அறிக்கை, ஜியோடேக்கிங், RERA பதிவு உள்ளிட்ட நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட்ட பிறகே நிதி விடுவிக்கப்படுகிறது.

திட்ட முன்னேற்றத்தை கண்காணிக்க மாநிலங்கள்/மத்தியப் பிரதேசங்களுடன் முறைப்படி ஆய்வு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. தற்போது SNASPARSH தொகுதியில் போதுமான நிதி இருப்பதாகவும், 'மதர் சான்க்ஷன்' அடிப்படையில் மாநிலங்கள் பயனாளிகளுக்கு நிதி வழங்கி வருவதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### கழக ஆட்சியின் போதெல்லாம் மெருகூட்டப்பட்ட -

# திருவாரூர் தியாகராஜர் சுவாமிகள் ஆழித் தேரோட்டம்!

## பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் பங்கேற்பு!

திருவாரூர், மார்ச் 28-

திருவாரூரில் உலகப்புகழ் பெற்றதும், வரலாற்று சிறப்பு மிக்கதுமான தியாகராஜ சுவாமிகள் ஆழித்தரோட்டம் 29.03.2026 ஞாயிறு அன்று கோலாகலமாக நடைபெறுகிறது. லட்சோப லட்சம் மக்கள் கூடும் இந்த தேரோட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ,துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது வழிகாட்டுதலகளின்படி சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான பூண்டி. கே. கலைவாணன் உள்ளிட்டோர் பங்கேற்று தேரை வடம்பிடிக்க இருக்கின்றனர்.

தமிழ்நாட்டின் பெருமைகளுள் ஒன்றாகவும், ஆசியாவின் மிகப்பெரியதும், உலகப்புகழ் பெற்றதுமான திருவாரூர் தியாகராஜர் சுமாமிகள் திருக்கோயில் ஆழித்தேரோட்டம் 29.03.2026 ஞாயிறுஅன்று நடைபெறுகிறது.

ஆதியும் அந்தமும் அறியப்படாத வகையில் மிகப்பழமையான கோயிலாக விளங்கும் திருவாரூர் தியாகராஜர்சுவாமிகள் திருக்கோயிலின் புகழ்பெற்ற இந்த ஆழித்தேர் பல்வேறு காரணங்களால் ஓடாமல் கிடந்தபோது, அதனை மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்தான் கழக ஆட்சிகலத்தில் ஓடச்செய்தார், தேர் ஓடத்துவங்கி நிலைக்கு வார நாட்கணக்கில் ஆகும் நிலைய மாற்றி ஒரேநாளில் தேரை நிலைக்கு கொண்டுவரும் முயற்சிகளையும் கழக ஆட்சியே மேற்கொண்டது.

தேரை புணரமைப்பது, தேரோடும் வீதிகளில் கான்கிரீட் சாலைகள் அமைத்தது, தேரோடும் வீதிகளில் இடையூராக இருந்த மின் கம்பிகளை புதைவட மின் பாதைகளாக அமைத்தது, கோயில் பிரகாரங்களை புணரமைத்தது, அன்னதானம், சேதமடைந்த கமலாலய குளம் சீரமைப்பு இப்படி பல்வேறு வசதிகளை திமுக தலைமையிலான ஆட்சி தமிழ்நாட்டில் அமையும்போதெல்லாம் தலைவர் கலைஞர் அவர்களாலும், திராவிட நாயகர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களாலும் திருவாரூர் தியாராஜர் சுவாமிகள் திருக்கோயில் கண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களின் கண்காணிப்பில் புகழ்மிக்க கல் தேர்சீரமைப்பு , பிரகார புணரமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை இந்த கோயில் கண்டிருக்கிறது. பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் மாணவரான கலைஞர் அவர்களும் திராவிட நாயகர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களும் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்ட அனைத்து தரப்பு மக்களின் எண்ணங்களையும், விருப்பு வெறுப்புகளின்றி ஈடேற்றும் வகையில் திருவாரூர் தியாகராஜர் சுவாமிகள் கோவில் மற்றும் ஆழித்தேரின் பெருமைகளை உலகறிய செய்தார்கள் .

இப்படி கழக ஆட்சிகளின் போதெல்லாம் பொலிவு பெற்ற திருவாரூர் தியாகராஜர் சுவாமிகள் கோவில் ஆழித்தேரோட்டம் நாளை 29.03.2026 ஞாயிறு அன்று நடைபெறுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைகளின்படியும், அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும் , சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன்,நகர செயலாளர் வாரை. எஸ். பிரகாஷ் , நகர்மன்ற தலைவர் புவனப்ரியாசெந்தில், துணைத் தலைவர் அகிலாசந்திரசேகர் மற்றும் கோயில் நிர்வாக குழு, மாவட்ட நிர்வாகம் அறநிலையத்துறையினரும்,சமூக அமைப்புக்களும் இணைந்து சிறப்பான ஏற்பாடுகளையும், பாதுகாப்பு மற்றும் குடிநீர், சுகாதார வசதிகளையும் சிறப்பாக செய்துள்ளனர்.



கரூர் சட்டமன்ற தொகுதி, கரூர் தெற்கு பகுதி கழக செயல்வீரர்கள் கூட்டம் ராமகவுண்டனூர் எஸ்.பி. மகாலில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் , மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக , பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், பூத்(மண்டல) பொறுப்பாளர்கள், பூத் கமிட்டி நிர்வாகிகள், மாவட்டம், பகுதி, வார்டு சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.

### கடும் நடவடிக்கை பாயும்

# கேஸ் செலவுக்கு தனி கட்டணம் ஓட்டல்கள் வசூலிக்கக் கூடாது:

## நுகர்வோர் ஆணையம் எச்சரிக்கை!

புதுடெல்லி, மார்ச் 28-

மேற்கு ஆசியா போரால், நாடு முழுவதும் வர்த்தக காஸ் சிலிண்டருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஓட்டல்கள், உணவகங்கள் காஸ் செலவுக்கென தனியாக கட்டணம் வசூலிக்கின்றன.

இது குறித்து மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தேசிய நுகர்வோர் உதவி மையத்தில் பெறப்பட்ட புகார்கள் மற்றும் ஊடக அறிக்கைகளின் அடிப்படையில், சில ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் நுகர்வோருக்கு வழங்கும் பில்களில் 'எல்பிஜி கட்டணம்', 'எரிவாயு கூடுதல் கட்டணம்' மற்றும் 'எரிபொருள் செலவு மீட்பு' போன்ற கூடுதல் கட்டணங்கள் வசூலிப்பதை சிசிபிஏ தீவிரமாக கவனத்தில் கொண்டுள்ளது.

இது நியாயமற்ற வர்த்தக நடைமுறையாகும். எந்தவொரு ஓட்டலோ அல்லது உணவகமோ, பில்லில் காஸ் செலவுக்கு கூடுதல் கட்டணங்களை விதிக்கக் கூடாது. இதை மீறுவது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கைக்கு உள்ளாகக் கூடும்.

இவ்வாறு எச்சரித்துள்ளது.

### மேட்டுப்பாளையத்திற்கு

# 432 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வருகை!

மேட்டுப்பாளையம், மார்ச் 28-

மேட்டுப்பாளையத்திற்கு 432 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு வரப்பட்டன. தமிழகத்தில் வரும் ஏப்ரல் 23ம் தேதி ஒரே கட்டமாக சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதியில் மொத்தமாக 360 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. இந்த வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்பட உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கோவை தெற்கு தாலுகா அலுவலகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்கள் நேற்று முன்தினம் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர், அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பிரித்து அனுப்பப்பட்டன. தொடர்ந்து கோவையில் இருந்து மேட்டுப்பாளையம் சிறுமுகை சாலையில் உள்ள நஞ்சையா லிங்கம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் உள்ள பாதுகாப்பு அறைக்கு 432 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 468 விவி பேட், 432 கண்ட்ரோல் யூனிட் ஆகியவை பலத்த போலீஸ் பாதுகாப்புடன் பத்திரமாக கொண்டு வரப்பட்டன.


# தேர்தல் செய்திகள்!

### தேர்தல் நடக்கும் 5 மாநிலங்களில்

## ரூ.408 கோடி ரொக்கம், பொருட்கள் பறிமுதல்!

சென்னை,மார்ச் 28-

தேர்தல் நடக்கும் 5 மாநிலங்களில் ஆவணமின்றி கொண்டு சென்ற ரூ.408 கோடி ரொக்கம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ரூ.17.44 கோடி பணம், ரூ.37.68 கோடி மதிப்பு மதுபானம், ரூ.167.38 கோடி மதிப்புள்ள போதைப் பொருள் பறிமுதல். ரூ.23 கோடி மதிப்பிலான அரிய உலோகங்கள், ரூ.163.30 கோடி மதிப்பில் இலவச பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.




சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நியூ கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் VOTE 100% என்ற வடிவில் மனிதச் சங்கிலி போன்று நின்று வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

### தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தல்;

## ஏப்ரல் 6 வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள்!

சென்னை,மார்ச் 28-

234 தொகுதிகளை கொண்ட தமிழக சட்டசபைக்கான தேர்தல் தேதி, வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களை இந்திய தலைமை தேர்தல் ஆணையம் கடந்த 15-ந்தேதி அறிவித்தது. இதன்படி, ஏப்ரல் 23-ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தி முடிக்கப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும். இதனை முன்னிட்டு அனைத்து கட்சிகளும், கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு, நட்சத்திர பேச்சாளர்கள் தேர்வு உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

இந்நிலையில், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று முன்தினம் வெளியிட்ட செய்தியில், 2026-ம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலுக்கான அறிவிக்கை வெளியிடும் நாள் 30.03.2026 (திங்கட்கிழமை) முதல் 06.04.2026 (திங்கட்கிழமை) வரை காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம்.

1881-ம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின்கீழ், பொது விடுமுறையாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 31.03.2026 (செவ்வாய்க்கிழமை), 01.04.2026 (புதன்கிழமை), 03.04.2026 (வெள்ளிக்கிழமை) மற்றும் 05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் வேட்புமனு தாக்கல் செய்ய இயலாது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய கடைசி நாள் 06.04.2026 (திங்கட்கிழமை) ஆகும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.




சென்னை தூர்தர்ஷன் கேந்திரா கூட்ட அரங்கில், நேற்று முன்தினம் (26.03.2026) தலைமை தேர்தல் அதிகாரி /அரசு முதன்மை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், முன்னிலையில் 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலுக்காக தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலியில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு ஒளிபரப்பு /ஒலிபரப்பு தேதி மற்றும் நேரம் ஒதுக்குவதற்கான தேர்வு குலுக்கல் முறையில் நடைபெற்றது.

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு நிறைவு!

சென்னை,மார்ச் 28-

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க நேற்று கடைசி நாள் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் எஸ்ஐஆர் எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கு பிறகு வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின் படி மாநிலம் முழுவதும் மொத்தம் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.

இந்நிலையில் விடுபட்ட நபர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்ப்பதற்கு விண்ணப்பிக்க நேற்று முன்தினம் இறுதி வாய்ப்பு வழங்கப்பட்டது.

நேற்று மாலைக்குள் பெறப்படும் விண்ணப்பங்களை மட்டுமே தேர்தல் அதிகாரிகள் பரிசீலனை செய்வார்கள். இதன்பிறகு விண்ணப்பித்தவர்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெறும். ஆனால் விண்ணப்பிக்கவில்லை என்றால் அடுத்த மாதம் 23ம் தேதி நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிக்க முடியாது. எனவே 18 வயது பூர்த்தி அடைந்த இளைஞர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் என அனைவரும் தவறாமல் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.